மறைந்த அப்பெரியவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா எண் 161, திரு. சி. இராமசுவாமி; மாண்புமிகு சட்ட அமைச்சர்.

161--

விழுப்புரத்தில் குடும்ப நல நீதிமன்றம் அமைத்தல்.

***24938*–திரு. சி. இராமசுவாமி:**

மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா --

(அ) விழுப்புரத்தில் குடும்ப நல நீதிமன்றம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விழுப்புரத்தில் ஒரு குடும்ப நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை இது நாள் வரை அரசின் முன் வைக்கப்படவில்லை. இத்தகைய கோரிக்கை பெறப்படின் அதன்பின் பரிசீலிக்கலாம்.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டத்தில் குடும்ப நல வழக்குகள்--Dowry, Maintenance, Restitution of Conjugal rights, Marriage offences like bigamy--மற்றும் இதுபோன்ற வழக்குகள் டிஸ்டிரிக்ட் கோர்ட், சப் கோர்ட் அண்டு டிஸ்டிரிக்ட் முனிசிப் கோர்ட்டுகளில் தேங்கிக் கிடக்கின்றன. தனியாக கோர்ட் இருந்தால் அந்த வழக்குகளை

விரைவாக நடத்த ஏதுவாக இருக்கும். ஆனால் குடும்ப நல நீதிபதிக்கு 'ஸ்பெஷல் பவர்' கொடுக்கப்பட்டுள்ளது. வழக்குகளை அவரே துரிதப்படுத்தி முடிக்கலாம். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோரிக்கை இல்லை என்கிறார்கள். அந்த மாவட்ட வழக்கறிஞர் என்ற முறையிலும், வழக்கறிஞர்கள் பிரிவு சங்கத் தலைவர் என்ற முறையிலும், அதாவது அகில இந்திய அ.தி.மு.க. வழக்கறிஞர் சங்கத் தலைவர் என்ற முறையிலும், இந்தக் கேள்வியை கோரிக்கையாக ஏற்று, அந்த குடும்ப நல நீதிமன்றத்தை இந்த ஆண்டிலேயே துவக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குடும்ப நீதிமன்றம் அமைக்க வேண்டுமானால், குறைந்தபட்சம், அந்தப் பகுதியில் 10 இலட்சம் மக்கள் இருக்க வேண்டும் என்பது மத்திய சட்டத்தினுடைய ஒரு அம்சம். அந்த வகையில் விழுப்புரத்தில் 10 இலட்சம் இருக்கிறதா என்ற விவரங்களையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசுக்குத் தெரிவிப்பார்களேயானால், அந்த மனுவின் மீது அனுதாபத்தோடு நடவடிக்கை எடுக்கப்பட்டு அங்கு நீதிமன்றம் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் கூறியது போல் விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டத்தில் 10 இலட்சத்திற்கும் அதிகமாக ஜனத்தொகை இருக்கிறது. அமைச்சர் அவர்கள் கூறிய அனைத்துக் கருத்துகளையும், நான் ஒரு மக்கள் பிரதிநிதி என்ற முறையில், மனுவாக அமைச்சரிடம் கொடுக்க இருக்கிறேன். அதை ஏற்றுக்கொண்டு கூடிய விரைவில் இந்தக் குடும்ப நல நீதிமன்றத்தை திறக்க அமைச்சர் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனு கொடுத்ததாக எனக்கு நினைவு இல்லை. அப்படிக் கொடுத்திருந்தால் அந்த மனுவின் மீது நடவடிக்கை எடுக்கிறேன். இல்லை எனில் இனி ஒரு மனு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் இப்போது அவர் கேட்கின்ற கோரிக்கையையே மனுவாக ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்கிறார்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கை தெளிவாக இல்லை. எனவே முழுமையாக எழுத்து வடிவத்தில் மனு வடிவத்தில் அமைச்சருக்குக்

கொடுத்தால் அதைத் துறைக்கு அனுப்பி ஆய்ந்து, உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பி, ஒப்புதல் பெற்று வாய்ப்பிருந்தால் அங்கீகரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி இரா. பாண்டியம்மாள்.

திருமதி இரா. பாண்டியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் ஃபேமிலி கோர்ட் எங்களுடைய அன்புத் தலைவி இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் எப்போது தொடங்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடந்த ஆண்டு ஜுன் மாதமே மதுரையில் ஒரு குடும்ப நீதிமன்றம் அதாவது ஃபேமிலி கோர்ட் அமைப்பதற்கு அங்கீகாரம் அளித்துவிட்டார்கள். அண்மையில் உயர்நீதிமன்றத்தோடு தொடர்பு கொண்டபோது வருகிற 16-4-1994 அன்று அதாவது இந்த மாதம் 16 ஆம் தேதி அன்று மதுரையில் ஃபேமிலி கோர்ட் தொடங்க உத்தேசித்திருக்கிறோம் என்ற தகவலை சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி அளித்திருக்கிறார்கள். எனவே 16-4-1994 அன்று மதுரையில் ஃபேமிலி கோர்ட் ஆரம்பிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 162, திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) அவருக்குப் பதிலாக திரு. தம்புசாமி கேட்கிறார், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

162--

நில உச்சவரம்பின் கீழ் கையகப்படுத்தப்பட்ட நிலம் வழங்கப்பட்டும், பயனாளிகள் பயன் பெறாமை

***19324–திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா ---

(அ) நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்தில் நிலஉச்சவரம்பில் நிலம் கையகப்படுத்தி தகுதியானவர்களுக்கு வழங்கப்படும் நிலத்தில் குறுக்கீடாகி பயனாளிகள் அனுபவிக்க முடியாது முறையீடு ஏதேனும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?